ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1643/36 - 2010 මාර්තු 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.03.04
1643/36 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்புரிமையை இழந்ததன் காரணமாக கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

தாமோதரம் உதயஜீவதாஸ் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக் கட்சியைச் சேர்ந்தவரும், கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. தாமோதரம் உதயஜீவதாஸ் என்பவரைப் பெயர் குறித்து அறிவித்துள்ளாராதலாலும்.

இப்போது கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. தாமோதரம் உதயஜீவதாஸ் என்பவர், கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்றுப் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2010, பெப்புருவரி 19.

3- 685/1

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்புரிமையை இழந்ததன் காரணமாக கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் தாமோதரம் உதயஜீவதாஸ் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான கோறளைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65அ (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. தாமோதரம் உதயஜீவதாஸ் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.

இப்போது கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. தாமோதரம் உதயஜீவதாஸ் என்பவர், கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்றுப் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2010, பெப்புருவரி 25.

3- 685/2

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

பத்மநாதன் விஜிதரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. கந்தையா காந்தன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. கந்தையா காந்தன் என்பவர், அவ்வெற்றிடம் ஏற்பட்ட ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரீ. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஏறாவூர் பற்றுப் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2010, பெப்புருவரி 25.

3- 686

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது தொடர்ந்து மூன்றுமாத காலப் பகுதிக்குள் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காததன் காரணமாக பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

திரு. பட்சம் சுதாகரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கை தமிழ் அரசுக் கட்சியின செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் நியமிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவராக நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. தங்கராசா புஷ்பராஜா என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது பொத்துவில் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. தங்கராசா புஷ்பராஜா என்பவர், பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பொத்துவில் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, பெப்புருவரி 22.

3- 687

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.